செ.வெ.எண். 63/பிப்ரவரி தேதி : 23.02.2017

<u>தருமபுரி மாவட்டம்</u>

# மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.






தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.02.2017) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் வறட்சி நிவாரண பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு அளிக்குமாறும், ஆண்டு கடன் திட்ட இலக்கு விரைவில் அடையுமாறும், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா திட்ட இலக்கினை UYELP, NEEDS, PMEGP மூலம் ஒருங்கிணைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு புகார் இருப்பின் 24 மணி நேரம் செயல்படும் மாவட்ட கட்டுப்பாட்டு அறை எண்கள் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 ஆகிய எண்களில் புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ரிசர்வ் வங்கியின் உதவி பொது மேலாளர் திரு. ரவீந்திரன், இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் மற்றும் துணை பொது மேலாளருமான திரு.கே.சூரியநாராயணன், முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர்

திரு. பார்த்தசாரதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு. குப்புசாமி, மகளிர் திட்ட அலுவலர் திரு. கல்யாணசுந்தரம், மாவட்ட தொழில் மைய மேலாளர் திரு. ரமேஷ், உதவி திட்ட அலுவலர் திரு. பிச்சாண்டி மற்றும் வங்கியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.